முச்சந்தி முரளி



“வெள்ளம் வந்த பிறகு அணையைக் கட்டாமல் இப்பவே முன்னேற்பாடுகளை இப்பவே செய்யுங்கோ”

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 364


திங்கட்கிழமை
25 நவம்பர் 2024

கார்த்திகை 10
வள்ளுவர் ஆண்டு 2055

# உயிரிழந்தோரை நினைவேந்த எவ்விதத் தடைகளும் இல்லை!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, நவம்பர் 25**



**உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவுகூருவதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. அதற்கு எந்தவிதத்திலும் இடையூறு ஏற்படுத்தப்பட மாட்டாது. ஆனால் தடை செய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்பின் படங்கள், இலச்சினைகளைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த இடமளிக்கப் படமாட்டாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித் திருக்கின்றார்.**

11

# நாட்டின் பாதுகாப்பில் அதிகவனம் தேவையாம்

## அநுரவுக்கு ரொஷான் அறிவுரை



கொழும்பு, நவ.25
புலிகள் அமைப்புக்கு 32 நாடுகளில் இன்னமும் தடை உள்ளது. புலம்பெயர் புலிகளும் உள்ளனர். அதனால் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்று முன்னாள் அமைச்சர்

11

### மோ.சைக்கிளை உடைத்து

# பணம் திருடி போதை நுகர்வு; இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம் - தட்டா தெருச் சந்திக்கு அருகில் மருத்துவர் ஒருவரின் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்புறப் பகுதியை உடைத்து பணத்தைத் திருடிச் சென்ற இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்புக் கமராப் பதிவுகளின்

11

# தவறான முடிவெடுத்து இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.25
நீர்வேலியில் வீடொன்றின் கிணற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

11

# விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம், நவ.25
விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்துள்ளார். மாங்குளத்தைச் சேர்ந்த மரியதாஸ் யுவான் கீர்த்தி (வயது-36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த 20 ஆம் திகதி இவர் விபத்தில் சிக்கியிருந்தார். மல்லாவியில்

11

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் சிறப்பான பெறுபேறுகளை அடைய உதயனின் உளமார்ந்த வாழ்த்துகள்.



# புயலாக மாறும் தாழமுக்கம் வடக்கு, கிழக்கில் கனமழை

## 500 மில்லிமீற்றர் வரை பெய்யும் சாத்தியம் வெள்ள இடர் ஏற்படலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், நவ.25
வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென் கிழக்கு பகுதியில் நேற்று உருவாகிய தாழமுக்கம் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது. இது இன்று இரவு அல்லது நாளை புயலாக மாற்றம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

11

### வெள்ள இடரைச் சமாளிக்க முன்னேற்பாடுகள் தீவிரம்!

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் தினங்களில் கனமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வெள்ள இடரைச் சமாளிக்கும்வகையில் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலரால் முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

11

# உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்!

கொழும்பு, நவ.25
நாடளாவிய ரீதியில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இன்று ஆரம்பமாகும் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை 2 ஆயிரத்து 312 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.
இந்தமுறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 32 ஆயிரத்து 183 பரீட்சார்த்திகள் தோற்றும் நிலையில், வடக்கு மாகாணத்திலிருந்து 17 ஆயிரத்து 212 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

11

# மறியலில் சந்தேகநபர் மரணம் பொலிஸார் தீவிர விசாரணை!



வவுனியா, நவ.25
வவுனியாவில் விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது உடலை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா பதில் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.
துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட செட்டிகுளத்தைச் சேர்ந்த 57 வயதான சந்தேகநபர்

11

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு!

## ராஜித சேனாரத்ன அறிவிப்பு



கொழும்பு, நவ.25
தமிழ், முஸ்லிம் மக்களுக்கான உரிமைகளை வழங்கி நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசாங்கத்தின் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கத் தயார்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச இல்லங்களை மீளளிக்காத 30 பேர்

கொழும்பு,நவ.25
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சுமார் 30 பேர் தங்களுடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை மீள ஒப்படைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
சில நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தங்களது உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து உடைமைகளை அகற்றி வருவதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (ச-இ)



# தமிழ்த்தேசியத்தின் பற்று மக்களிடம் நீங்கவில்லை

### விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், நவ.25**
**அண்மையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த்தேசமும், தமிழ்த்தேசியமும் அழியவில்லை. மாறாக தமிழ்த்தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்துநின்று அரசாங்கத்தை வெற்றியடையச்செய்திருக்கிறார்களே தவிர, தமிழ்த்தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை.**

-இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மாதத்துக்கொரு கேள்வி - பதில் பகுதியில் 'தமிழ்த்தேசியம் அழிந்துவிட்டதா? தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன அல்லவா?' என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழ்த்தேசிய சிந்தனையை வைத்து வியாபாரம் நடத்தியவர்கள் தேர்தலில் காணாமல்போயிருக்கிறார்கள்.
அதேவேளை தமிழ்த்தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் மொத்தத்தொகையைப் பார்த்தால், தமிழ்த்தேசியத்துக்கான எமது மக்களின் ஆதரவு குறையவில்லை என்ற விடயமே புலனாகிறது.
அதேவேளை ஐ.நா. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை ஒன்றின்கீழ் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்த்தேசம் என்பதை எந்தவொரு இலங்கை அரசாங்கமும் ஏற்காதவரை, வடக்கு கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் - என்றார். (ச-10)

## மீண்டும் விமல்

கொழும்பு,நவ.25
ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு பொதுத்தேர்தலில் போட்டியிடாமல் அரசியலுக்கு தற்காலிகமாக விடைகொடுத்திருந்த விமல் வீரவன்ஸ, புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு முயற்சித்து வருகின்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன எனவும், தேசிய சுதந்திர முன்னணி தலைமையிலேயே கூட்டணி அமையவுள்ளது எனவும் கூறப்படுகின்றது.
தேசிய வாதிகள் மற்றும் இடதுசாரித் தலைவர்களை கூட்டணிக்குள் உள்வாங்குவதற்கும், 'இலங்கையர்கள்' என்ற கொள்கையுடன் கூட்டணி பயணத்தைத் தொடர்வதற்கும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

## வாகன இறக்குமதிக்கு ஐ.எம்.எப். கட்டுப்பாடு

கிளிநொச்சி,நவ.25
வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு நாட்டில் உள்ள கையிருப்பு குறித்து அவதானம் செலுத்தப்படவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி பீற்றர் ப்ரூவர் தெரிவித்துள்ளார்.
வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவது நிதிக் கொள்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். நாட்டின் கையிருப்பில் கவனம் செலுத்தி அவதானமாக நிர்வகிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மொட்டுக்குத் தாவ ரோஹித சமிக்ஞை

கொழும்பு, நவ. 25
கட்சி என்ற ரீதியில் வேறுபட்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் நாட்டுக்காக கைகோர்த்தபோதிலும் எமது அரசியல் கட்சியான பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைவது மிகப்பெரிய விடயமல்ல என புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச எனது சகோதரர் போன்றவர். எதிர்க்கட்சியாக செயற்படுவது குறித்து கலந்துரையாடியுள்ளோம்.
ரணில் விக்கிரமசிங்கவுடன் நாட்டுக்காக கைகோர்த்த நாங்கள் எமது அரசியல் கட்சியான பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணைவது பிழையான விடயமல்ல. அரசியலில் நெடுநாள் நண்பனும் இல்லை, எதிரியும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கடலட்டைப் பண்ணை அனுமதி வழங்கப்படும்

*கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.25
கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் ஆர்வமுள்ளோருக்கு பண்ணை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படும் எனவும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கடலட்டைப் பண்ணைகள் தொடர்பில் முறைகேடுகள் நடந்துள்ளன. அட்டைப் பண்ணைக்காக ஒதுக்கப்பட்ட காணியில் இன்னமும் பண்ணைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே இந்தப் பண்ணைகள் அமைப்பதில் ஆர்வமுள்ளோருக்கு பண்ணை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படும். வடக்குக் கடல் வளத்தை மென்மேலும் வளர்த்தெடுப்பதே எமது நோக்கமாகும் - என்றார். (ச-45-125)




# வடக்கு மீனவப் பிரதிநிதிகளுடன் கடற்றொழில் அமைச்சர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் வடக்கு மாகாண மீனவப் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கடந்த கால அரசாங்கத்தின் காலப்பகுதியில் இழைக்கப்பட்ட அநீதிகள், மீனவசமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இந்திய -இலங்கை இழுவை மடி பிரச்சினை மற்றும் சங்கங்கள் சமாசங்களை ஜனநாயக அடிப்படையில் ஸ்தாபித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.
இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிக்கையில்,
ஒரு வருடத்துக்குரிய திட்ட முன்மொழிவை அரச அதிகாரிகள் தயாரித்து, சமர்ப்பிக்கவேண்டும். இத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு குறைந்தது மூன்று மாதகாலங்கள் தேவை - என்றார்.
சந்திப்பில் மீனவ சங்கத்தின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், ஆய்வாளர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் தவறை மீளவும் விடக்கூடாது

செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு



**வவுனியா, நவ.25**

**இனிவரும் காலங்களிலாவது நாங்கள் ஒன்றிணையவில்லை என்றால். வடக்கு - கிழக்கில் அரசாங்கம் ஆளும் சந்தர்ப்பத்தை உருவாக்கி தவறிழைத்தவர்களாக மாறிவிடுவோம். எனவே இனியாவது நாம் ஒன்றுபட வேண்டியது காலத்தின் தேவையாகும் - இவ்வாறு வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஒன்றிணைந்தால் மக்கள் எங்களோடு நிற்பார்கள் என்பதை தேர்தல்மூலம் சொல்லியிருக்கிறார்கள். மக்களின் எதிர்பார்பை இந்த அரசாங்கம் தீர்க்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு காலம் தான் பதில் சொல்லவேண்டும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் போது 13 ஆவது திருத்தமும் இல்லாமல் செய்யப்படும் என்ற நிலை வரலாம் எனக் கூறப்படுகின்றது. நல்ல விடயங்களை ஆதரிப்போம். மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் நிலை தொடர்ந்தால் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம்.

எனவே இனிவரும் காலங்களிலும் நாங்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கவேண்டும். இல்லாவிடின் வடக்கு - கிழக்கில் அரசாங்கம் ஆளும் சந்தர்ப்பத்தை உருவாக்கிய தவறை நாமே இழைக்கநேரிடும் - என்றார் (ரி-18,110)

## பேராறு நீர்த்தேக்கம் வான்கதவு திறப்பு

வவுனியா, நவ. 25

வவுனியா பேராறு நீர்த்தேக்கத்துக்கு தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்வரத்து அதிகரித்துள்ளதால், தற்போது ஒரு அடி உயரத்துக்கு வான் கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

எனவே பேராறு அணையின் கீழ்ப்பகுதியில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-18-110)





## பொன்சுதன் தந்தை சிலை விஷமிகளால் உடைப்பு!

கிளிநொச்சி,நவ.25

கிளிநொச்சி - இயக்கச்சிப் பகுதியிலுள்ள இராவணன் வனப்பகுதியில் பொன் சுதனால் நிறுவப்பட்ட அவரது தந்தையின் சிலை கடந்த வியாழக் கிழமை உடைக்கப்பட்டுள்ளது.

தன்மேல் இருக்கும் அரசியல் முரண்பாட்டால் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென பளைப் பொலிஸ் நிலையத்தில் பொன்சுதன் முறைப்பாடு செய்துள்ளார்.

பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-33-27)

## மூதாட்டி துணிகரம் திருட்டு முறியடிப்பு

யாழ்.குப்பிழான் தெற்கு வீரமனைப் பகுதியில் தனித்திருந்த முதிய பெண்மணியின் துணிச்சலான செயற்பாட்டால் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை வீட்டுச் சமையலறையின் ஓடு பிரித்து திருடர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர். வீட்டுக்குள் உறக்கத்திலிருந்த மூதாட்டி எழுந்து மனித நடமாட்டத்தை உணர்ந்த நிலையில் ' டேய் கள்ளரடா டேய் கள்ளரடா ' என்று உரக்கக் கத்தியுள்ளார்.

அதனையடுத்து அயலர்கள் அங்கு திரண்டதையடுத்து திருடர்கள் மதில் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளனர். பின்னர் அரைமணிநேரம் கழித்து மீளவும் நுழைந்துள்ளனர். அப்போதும் மூதாட்டி உரத்துக் கத்தியதையடுத்துத் திருடர்கள் அவ்விடத்தை விட்டுச்சென்றுள்ளனர். (ச-66)

## மாவீரர் நினைவேந்தல் பங்களிப்பு வழங்கலாம்

யாழ்ப்பாணம், நவ.25


தமிழர் வரலாற்றை எம் சந்ததிகளுக்குக் கடத்தும் நோக்கில் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாவீரர் நினைவுத் தூபியடியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தினமும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எங்கள் தேசத்தின் வித்துகளை நினைவேந்துவதில் தங்கள் கூட்டுணர்வையும், கூட்டுரிமையையும் நினைவேந்தலுக்கான பங்களிப்பினை வழங்குவதனூடாக வெளிப்படுத்தமுடியும். அந்தவகையில் நினைவேந்தலுக்கான கற்பூரம், எண்ணெய், சுட்டி, திரி போன்றவற்றை நவம்பர் 27 ஆம் திகதி புதன் கிழமை வரை தினமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுழைவாயிலில் அமைந்துள்ள சேகரிப்புக் கூடத்தில் வழங்கி எம்முடன் கரம் கோர்க்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச-66)




ஆசை வெக்கமறியாதது. அதைவிட பதவியாசை வெக்கங்கெட்ட வேலையளையும் பாக்கவைக்கும். பதவிக்காக என்ன குத்துக்கரணம் அடிக்கவும் கனபேர் ரெடியா இருக்கினம். அதிலையும் எங்கட தமிழ் அரசியல்வாதிமார் குத்துக்கரணம் மட்டுமில்லை பிரதட்டை அடிக்கச் சொன்னாலும் அடிப்பினம். அப்பிடிப்பட்டவை எம்.பி. பதவி கிடைக்குமெண்டா என்னென்ன திருகுதாளமெல்லாம் செய்வினம் எண்டு ஒருக்கா நினைச்சுப் பாருங்கோ. அப்பிடி எம்.பி. பதவிக்காக தன்னை ஏத்திவிட்ட ஏணியையே ஒருத்தர் எட்டித்தள்ளிப்போட்டு, தான் அந்தப் பதவியை எடுத்திருக்கிறார்.

இந்தமுறை எலக்சனில வீட்டுக்கட்சி யாழ்ப்பாணத்தில மூண்டு சீற் கிடைக்குமெண்டு எதிர்பார்த்தது. ஆனால் ரிசல்ட் வேற மாதிரி வந்திட்டு. யாழ்ப்பாணத்தில ஒரேயொரு சீற்தான் அந்தக் கட்சிக்கு. அதுவும் சிறியருக்குத்தான். இந்தமுறை வீட்டுக்கட்சியின்ர வேட்பாளர் பட்டியலும் தோல்விக்கு பெரும் காரணம். கட்சியில இவ்வளவுநாளும் கஷ்டப்பட்டு வேலை செய்தவையை விட்டுப்போட்டு, பெரிசா மக்களிட்ட நல்லபேரோ , செல்வாக்கோ இல்லாதவையளாப் பார்த்துதான் வேட்பாளர் பட்டியலை அப்புக்காத்து தயாரிச்சவர் எண்டு இப்பவும் சனம் கதைக்குது. இப்பிடி சனம் மதிக்காத ஆக்களை வேட்பாளர்களா இறக்கினதால, கோபத்தில சனம் திசைகாட்டிப் பக்கம் திரும்பிட்டுது. இப்பிடி திரும்பினதால நாடுமுழுக்க கிடைச்ச வாக்குகளை வழிச்சுத் துடைச்சு ஒருமாதிரி நேரடியாக் கிடைச்ச ஏழு சீற்றை விட, ஒரு தேசியப்பட்டியல் வீட்டுக்கட்சிக்கு கிடைச்சது. அந்த ஒரு கதிரைக்கு கனபேர் கடும் போட்டி போட்டவை. எண்டாலும் அப்புக்காத்தர், "நான் மக்களால தோற்கடிக்கப்பட்டால், தேசியப்பட்டியலால எம்.பி,யாக மாட்டன்" எண்டு முந்திச் சொன்னதால, இப்ப அந்தப் பதவியைத் தனக்குத் தரச்சொல்லி அவரால ஒருத்தரிட்டையும் கேக்க முடியேலை.

ஆனால் அரசியல் குழுவில அவருக்குச் சாதகமாகப் பேசி, இந்த இக்கட்டான நேரத்தில அப்புக்காத்துவின்ர சேவை கட்சிக்குத் தேவை எண்டு சிவப்புக்கம்பளம் விரிக்கிற தீர்மானத்தை எடுக்கவைச்சு, "கட்சி இப்பிடி கேக்கிறதால கட்சியின்ர நலன்கருதி நான் தேசியப்பட்டியல் எம்.பி.யா வாறன்" எண்டு அவரை வரப்பண்ணுறதுக்கு அவருக்கு விசுவாசமான சிலர் திட்டம் போட்டவை. அரசியல் குழுவிலையும் இப்ப தங்கட கன்னைதான் பலம் எண்டு நினைச்சுத்தான் அவை அப்பிடியொரு பிளான் போட்டவை. அவையின்ர பிளானில கட்சியின்ர பதில் செயலாளரா இருக்கிற சத்தியமான டாக்குத்தரும் உள்ளடக்கம். அவரும் அப்புக்காத்துவை தேசியப்பட்டியலில் கொண்டுவாறதுக்கு ஒத்தாசையா இருப்பார் எண்டு பார்த்தால், அவரோ " நான் வேலையை விட்டிட்டு வந்ததால எனக்குத்தான் தேசியப்பட்டியல் வேணும்" எண்டு அடம்பிடிச்சதோட, தனக்கு சப்போர்ட் பண்ண கூட்டம் நடக்கிற ஹொட்டலுக்கு முன்னால தன்ர ஆதரவாளர்களையும் கூட்டிக்கொண்டு வந்திட்டார். இதை அப்புக்காத்துவின்ர விசுவாசியள் எதிர்பாக்கவேயில்லை. "இவ்வளவு நாளும் அப்புக்காத்து சொன்னபடி ஆடிப்போட்டு கடைசி நேரத்தில இப்பிடிக் காலைவாரிப்போட்டாரே" எண்டு அவை ஒண்டும் செய்யேலாமல் இருந்திட்டினமாம். ஒருவேளை உந்த டாக்குத்தர் பதவிக்கு அடிபட்டு இப்பிடி முதுகில குத்தாமல் இருந்திருந்தால், அப்புக்காத்தர் பார்லிமெண்டில அஞ்சு வருசமும் பிரிச்சு மேய்ஞ்சிருப்பார். குழிபறிக்கிறவையை கூடவே வைச்சிருந்ததால அதுக்கு சான்ஸே இல்லாமல் போட்டுது.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நினைவேந்தலுக்கு இனியும் இடையூறளிக்காதீர்

## ஜனநாயக போராளிகள் கட்சி வலியுறுத்து



யாழ்ப்பாணம், நவ.25

மாவீரர் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்ள அனுமதியளிப்பதுடன் மாவீரர் துயிலுமில்லக் காணிகளிலிருந்தும் இராணுவத்தினர் வெளியேற புதிய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனநாயக போராளிகள் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பில் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தெரிவிக்கையில்,

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நாட்டை ஐக்கியப்படுத்தப் போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மாவீரர் நினைவேந்தலை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு ஏதுவாக மாவீரர் துயிலுமில்லங்களிலிருந்து இராணுவம் வெளியேறி உறவுகள் நினைவுகூர நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ரி-27)

# யாழ்ப்பாணத்தில் கலைநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நவ.25

திருமறைக் கலாமன்ற தினத்தையும், 60ஆவது மணிவிழா ஆண்டின் ஆரம்பத்தையும் சிறப்பிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலை நிகழ்ச்சிகள் இல.286,பிரதான வீதி, யாழ். கலைத்தூது கலையகத்தில் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ரி-66)

# மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ.25

மாவீரர் நாளை முன்னிட்டு மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு பருத்தித்துறை சுப்பர்மட பொதுநோக்கு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45-100)

# மருதங்கேணியில் குருதிக்கொடை



யாழ்ப்பாணம், நவ.25

மாவீரர் நாளை முன்னிட்டு இரத்த தான முகாம் வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் மருதங்கேணி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

இரத்ததான முகாமில் அனைவரும் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்குமாறு வடமராட்சி கிழக்கு இளைஞர்கள் அழைப்பு விடுத்துள் ளனர். (ரி-66-27)

# தொழிற்பயிற்சிக் கற்கை விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.25

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை 2025ஆம் ஆண்டு முதலாம் அரையாண்டுக்கான முழுநேர கற்கைநெறிகள் 2025 ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி படவடிவமைப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலை வல்லுநர், முன்பள்ளி ஆசிரியர், விரைவுசேவை உணவு வழங்குநர், பெற்றோல் மற்றும் டீசல் வாகன இயந்திர திருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழுக்கான பயிற்சிநெறியாகும். கற்கைநெறியை கற்க விரும்புவோர் தமது பதிவுகளை டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி, வீரசிங்க மண்டபம், யாழ்ப்பாணம் இல.12, கே.கே.எஸ். வீதி அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும் எனவும், மேலதிக விவரங்களுக்கு 0212227949, 0710318737 மற்றும் 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் யாழ். இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார். (ரி-45)

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள் வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.



**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.



**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். முக்கியமான முடிவுகளை ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.



**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



**கன்னி:** போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி அலுவலகத்தில் பணிச்சுமை இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள்.



**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார்.



**விருச்சிகம்:** தந்தை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.



**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.



**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயல்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும்.



**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.



**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.



# இருபாலையில் மரநடுகை

ஆறுமுகநாவலர் நினைவாக நேற்று முன்தினம் சனிக்கிழமை இருபாலையில் மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. 'விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில்' என்ற தொனிப்பொருளில் பசுந்தேசம் அமைப்பும், இயற்கையின் நண்பர்கள் இயக்கமும் இணைந்து ஆண்டுதோறும் மரநடுகை செய்துவருகின்றது.

அதன் ஒரு பகுதியாக ஆறுமுகநாவலரின் நினைவு நாளினை முன்னிட்டு இருபாலை வன்னியசிங்கம் சனசமூகநிலையத்துக்கு வழங்கப்பட்ட மரக்கன்றுகள் வீதியோரங்களில் நிழல் தேவையானவிடங்களில் நடுகை செய்யப்பட்டன. (ச-22-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாவீரர்நாளும் சவால்களும்

தேசிய மக்கள் சக்திக்கு மாவீரர் நாள் ஒரு சத்திய சோதனையாக மாறிவிட்டது. தேசிய மக்கள் சக்தியின் முதுகெலும்பாக உள்ள ஜே.வி.பி. ஒரு ஆயுதப் போராட்டக்குழுவாக இருந்து, பின்னர் அரசியல் பாதைக்குத் திரும்பிய அமைப்பு என்பதால், அவர்களுக்கு போராட்ட உயிரிழப்புகளால் உண்டாகும் வலியும், அதன் ஆழமும் புரியுமென தமிழ் மக்கள் நம்புகின்றனர். ஆனால் மாவீரர்நாளை தமிழ்மக்கள் கொண்டாடுவதற்கு பகிரங்கமாக அனுமதித்தால், அதைவைத்தே இனவாத அரசியல்செய்யும் எதிர்க் கட்சிகள் இந்த அரசாங்கத்துக்கு எதிராக சிங்கள மக்களை திசைதிருப்புவதற்கான வாய்ப்புகளும் அதிகமுண்டு. இருப்பினும் ஜே.வி.பி.யினரும் தமது அமைப்பில் இருந்து உயிர்நீத்தோரை இதே கார்த்திகை மாதத்தில் தான் நினைவுகூருகின்றனர். எனவே இம்முறை மாவீரர்தினத்தை கடந்தகாலங்களைப் போல தடைகோரும் வழக்குகள், பொலிஸ் கெடுபிடிகள், பாதுகாப்புப்படையினரின் அடக்குமுறைகள் என்பன இல்லாமல், ஓரளவுக்கு சுதந்திரமாக நினைவேந்தலாம் என்ற தமிழ் மக்களின் கனவில் மண்ணள்ளிப் போட்டுள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால.

'வடக்காக இருந்தாலும், கிழக்காக இருந்தாலும், தெற்காக இருந்தாலும், மலையகமாக இருந்தாலும் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்குரிய உரிமை உள்ளது. இதற்கு நாம் எந்தவிதத்திலும் இடையூறு ஏற்படுத்தவில்லை. தடைசெய்யப்பட்ட தமது பிள்ளைகளை நினைவுகூரும்போது அவர்கள் பயங்கரவாதிகளை நினைவுகூருகின்றனர் எனக் காட்ட முற்படவும்கூடாது. எனினும், புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அவ்வமைப்பின் இலச்சினை, படங்களைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வை நடத்த இடமளிக்கமுடியாது' என்று அவர் சொல்லியிருக்கிறார். ஏறக்குறைய இதே வார்த்தைகளையே கடந்தகால அரசாங்கங்களும் பயன்படுத்தி இருந்தன. மேலோட்டமாகப் பார்த்தால், மாவீரர் நாளை தடையில்லாமல் நினைவேந்தலாம் என்பது போன்றே இந்த அறிவிப்பு தோன்றும். ஆனால் உள்ளார்ந்தரீதியாகப் பார்த்தால் 'புலிகளின் இலச்சினை, படங்களைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வை நடத்த இடமளிக்கமுடியாது' என்ற வார்த்தைக்குள் வைக்கப்பட்டிருக்கும் பொறியை இனங்கண்டுகொள்ளமுடியும். புலிகளின் இலச்சினைகள், படங்கள் என அரச தரப்பு எவற்றைக் கருதுகின்றது? என்பதற்கு எவ்வித வரையறைகளும் இல்லை. கார்த்திகைமலர் தொடக்கம் கல்லறைகள் வரைக்கும் படைத்தரப்பும், சிங்கள ஏகாதிபத்தியமும் புலிகளின் சின்னங்களாகவே கருதுகின்றன. ஒருகட்டத்தில் 'திடீர்' தீபமேற்ற உதவும் வாழைக்குற்றியைக் கூட புலிகளை நினைவேந்திய தடயப்பொருளாக கைப்பற்றி, அவை பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட சம்பவங்கள் கூட உண்டு.

இப்படிப்பட்ட நிலையில், இம்முறையும் மாவீரர் நாளுக்கு தடைகளும், இடையூறுகளும் ஏற்படுத்தப்படலாம் என்பதையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் நேற்றைய அறிவிப்பு உணர்த்தி நிற்கின்றது. எனினும் பாம்புக்கு வாலையும், மீனுக்கு தலையையும் காட்டும் விலாங்குத்தனத்தோடு இந்த மாவீரர் தினத்தை அரசாங்கம் கையாண்டால், அது அரசாங்கத்துக்கு லாபகரமானதாக இருக்கும். தமிழ்மக்கள் மாவீரர்நாளை நினைவேந்துவதை எவ்வித இடையூறும் செய்யாமல் அனுமதித்துக்கொண்டு, 'அவர்கள் புலிகளின் இலச்சினை, படங்களை வைத்து நினைவேந்தல் செய்யவில்லை' என்று சிங்கள மக்களையும் சமாளிக்கலாம். இதுவே இப்போதைக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முன்னுள்ள சரியான தெரிவாக இருக்கமுடியும். அவ்வாறில்லாமல் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த, முன்னைய ஆட்சியாளர்களின் வழியில் மாவீரர்நாளுக்கு எதிராக அடக்குமுறை வழியைத் தேர்வு செய்தால், எந்தத் திசையை நோக்கி இந்த அரசாங்கம் பயணப்படப்போகின்றது என்பதை தமிழ் மக்கள் நன்குணர்ந்து கொள்ளமுடியும்.




# வேலையற்ற பட்டதாரிகள்; அரசாங்கம் கூடுதல் கவனம்

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், நவ.25**

**வேலையற்ற பட்டதாரிகள் தொடர்பில் எமது அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தும் எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மீனவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் அதில் எந்தவித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை . தனியே அரச வேலைவாய்ப்பை மட்டும் நம்பியிருக்காது, வேறுபட்ட தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் . எமது வரவு - செலவுத் திட்டத்திலே இது தொடர்பான நிறைவான ஆலோசனைகள் முன்வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-45-125)

# மின்சாரசபை ஊழியருக்கு ஊக்குவிப்புக்கொடுப்பனவு

கொழும்பு,நவ.25

இலங்கை மின்சாரசபை இலாபமீட்டும் நிறுவனமாக மாறியுள்ள நிலையில், அதன் பணியாளர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜயலால், இலங்கை மின்சாரசபையின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தேசப்பிரிய வீட்டில் திருட்டு

கொழும்பு,நவ.25

முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் அம்பலாங்கொடையிலுள்ள வீட்டில் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மஹிந்த தேசப்பிரியவின் மனைவி அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இரண்டு எரிவாயுக் கொள்கலன்கள், ஒரு தொலைக்காட்சி, இரண்டு தங்க நகைகள் மற்றும் நான்கு கைக்கடிகாரங்கள் என்பன திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



# 20 நாள்களில் 1,20,961 சுற்றுலாவிகள்

கொழும்பு,நவ.25

இந்த மாதத்தின் முதல் இருபது நாள்களில் ஒரு லட்சத்து 20,961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். அதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 17 இலட்சத்து 41 ஆயிரத்து 676 ஆகப் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 497 இந்திய மீனவர்கள் இந்த வருடத்தில் கைது

கொழும்பு,நவ.25

இந்த வருடத்தில் கடல் எல்லையை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 497 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. 66 மீன்பிடிப் படகுகளில் வந்த இந்திய மீனவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கடற்படைப் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார். (ச-இ)

## நாளை

26.11.2024

செவ்வாய்க்கிழமை - கார்த்திகை - 11

சுபநேரம் : 10.42 - 12.12

ராகுகாலம் : 03.12 -04.42

## நாளொரு நல்வார்த்தை

**சாகுமுன் என் பாட்டன் நாட்டிய பழங்களைக் கேட்டுப்பார் உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்.**

-வ.ஐ.ச.ஜெயபாலன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சிக்கும் இந்திய அரசு: சீனாவே இனித் தஞ்சம்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையப் பேச்சாளர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ.25

**வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்களை இந்திய அரசு தொடர்ந்து வஞ்சித்து வரும் நிலையில் மீனவர்களின் இருப்பைத் தக்க வைக்க சீனாவுடன் பயணிக்கும் முடிவை எடுப்பதே சாலச் சிறந்தது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.**


உலக மீனவர் தினத்தை முன்னிட்டு ஊடக சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
தமிழ்நாட்டுடன் தொப்புள்கொடி உறவு என்ற அடிப்படையில் இணைந்து பயணிக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு எம்மிடம் இருந்தது. ஆனால் அந்த நிலையிலிருந்து வடக்கு கடற்றொழில் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் எங்களுடைய வளத்தை இந்திய மீனவர்கள் அழிக்கின்ற பொழுது இந்திய அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமலேயே உள்ளது. இந்த நிலை தொடருமானால் சீன அரசாங்கத்துடன் இணைந்து பயணித்து எமது கடல் இருப்பையும் பொருண்மியத்தையும் பாதுகாக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. இந்த நிலைமையை இந்திய அரசாங்கமே ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே தமிழர் உரிமை விடயத்தில் ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இந்தியா தொடர்ந்து எம்மை ஏமாற்ற முனையுமானால் நாங்கள் சீன அரசாங்கத்தின் உதவியை நாட வேண்டிவரும்- என்றார். (ச-125)





### யாழ்.பல்கலைக்கழக

# கிளிநொச்சி வளாகத்தில் பள்ளிவாசல் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களின் வழிபாட்டுக்காக முஸ்லிம் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா கலந்து கொண்டதுடன் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களும் பங்கேற்றனர். (ரி-113)



# கன்றுத்தாச்சி மாடு இறைச்சியாக்கல்

## ஊர்காவற்றுறையில் பாதகம்

ஊர்காவற்றுறையில் உயர்ரக கேப்பை இனக் கன்றுத்தாச்சி வளர்ப்பு மாடு ஒன்று இனந்தெரியாத நபர்களால் கடந்த வெள்ளிக்கிழமை இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது.

தகவலறிந்த புளியங்கூடல் பகுதி இளைஞர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது சந்தேகநபர்கள் தப்பிச் சென்ற நிலையில் மோட்டார்ச் சைக்கிள் மற்றும் 200 கிலோ இறைச்சி என்பவற்றை கைப்பற்றி ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-ரி-66)

# படையினர் விடுவித்த காணிகளில் தேக்குமரங்கள் வெட்டி 'அபேஸ்'



முல்லைத்தீவு, நவ.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மன்னாகண்டல், வசந்தபுரம் கிராமத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகளில் தேக்குமரங்கள் வெட்டி குற்றிகளாக்கப்பட்டு சட்ட விரோதமாக கடத்தப்பட்டு வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வசந்தபுரம் கிராமத்தில் விடுதலைப்புலிகளின் பண்ணையாக காணப்பட்ட 20 ஏக்கர் காணியில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர் முகாம் அமைத்து நிலை கொண்டிருந்தனர். இந்த நிலையில் 14 ஆண்டுகளின் பின்னர் கடந்த மாதம் 28 ஆம் திகதி இராணுவத்தினர் வெளியேறிய நிலையில் காணிகளில் வளர்ந்திருந்த பயன்தரு தேக்கு மரங்கள் இனந்தெரியாத நபர்களால் அறுக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் ஏற்றப்படுகின்றன. இது குறித்து மக்கள் முறையிட்டும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே உரிய அதிகாரிகள் இதனைக் கட்டுப்படுத்தி ஏனைய இயற்கை வளங்களான மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-22,19)



# பரிசளிப்பு விழா

யாழ்.மயிலணி சைவமகா வித்தியாலயப் பாடசாலைச் சமூகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தப் பரிசளிப்பு விழா அதிபர் பா.பார்த்தீபன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. 2022, 2023 ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்கள், 2023 ஆம் ஆண்டுக்கான தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள், இணைபாடவிதானச் செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. ரவீந்திரன் பிரதம விருந்தினராகவும், கட்டடப் பொறியியலாளர் திருமதி நி. சுபாங்கன் சிறப்பு விருந்தினராகவும், யாழ்.சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் ஆசிரியர் திருமதி சு.விவேகானந்தன், யாழ்.ஆனைக் கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் ஆசிரியர் திருமதி ஐ.ஜெயக்காந்தன் ஆகியோர் விருந்தினர்களாக வும் கலந்துகொண்டனர். (ரி-66)



# வட்டுவாகல் பாலத்தால் பாய்கின்றது வெள்ளம்

முல்லைத்தீவு , நவ. 25


அண்மையில் பெய்த மழைவெள்ளத்தினால் நந்திக் கடல் நீர் நிரம்பி வழிந்தோடுவதால் வட்டுவாகல் பாலத்தின் மேல் மட்டத்துக்கு மேலாக நீர் பாய்ந்தோடுகிறது.

முல்லைத்தீவு நகரத்தின் நுழைவாயிலாக வட்டுவாகல் பாலம் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் போா முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கத்திடம் வட்டுவாகல் பாலத்தை புனரமைத்து தருமாறு பலதடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பாலம் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் வட்டுவாகல் பாலம் ஆபத்தான நிலையில் காணப்படுவதுடன் மழைகாலத்தில் அதனூடாக நீர் நிரம்பி வழிந்தோடுவதால் உயிராபத்தாக பயணிக்க நேரிடுகிறது.

எனவே புதிய அரசாங்கம் இந்த விடையத்தை கருத்தில் எடுத்து வட்டுவாகல் பாலத்தைப் புனரமைப்புச் செய்யவேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-22,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.25

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கோப்பாய்ப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவை நடத்திய பண்பாட்டுப் பெருவிழா 2024 கோப்பாய்ப் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் யாழ்.புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டு அலுவல்கள்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், யாழ்.புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் மற்றும் கலைஞர் வடிவேலு பாலச்சந்திரன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ச-45-66)



## வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.25

உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சௌபாக்கியா உற்பத்திக் கிராமத் திட்ட சந்தை மற்றும் வர்த்தகக் கண்காட்சி சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கு அருகில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்கள் பலரும் தமது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்தனர். (ச-45-66)



## உணவுத் திருவிழா!

கிளிநொச்சி, நவ. 25


மரபுசார் உணவுத் திருவிழா நிகழ்வு வறோட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பசுமைப் பூங்கா வளாகத்தில் 'மரபுசார் உணவு: மருந்தாகும் விருந்து' எனும் தொனிப்பொருளில் கடந்த வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரை நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி தயாளினி, கிளிநொச்சி மாவட்ட சித்த ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் கலாநிதி அ.அரவிந்தன், கரைச்சிப் பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், வறோட் நிறுவனப் பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ச-45-113)

## வெள்ள இடர் களப்பணி இளைஞர்குழு களத்தில்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆதரவளிப்பதற்கு இளைஞர் குழுவொன்று களத்தில் இறங்கியுள்ளது.

கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் இணைந்த விதையனைத்தும் விருட்சம் ஆகியவற்றின் இளைஞர் குழுவே களமிறங்கியுள்ளது. அந்த வகையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, குடிதண்ணீர், குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மற்றும் ஆடைகள் வழங்குவதற்கு இந்தக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் களப்பணியில் இணையக்கூடியவர்கள் இணைந்து கொள்ளமுடியும் என்றும் நிதி பங்களிப்புச் செய்யக்கூடியவர்களும் 0773241755 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,66)





சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் 'அறமும் ஆண்டவனும்' எனும் தலைப்பில் ஆசிரியர் ஸ்ரீ.ஆதவன் ஆன்மீக உரை ஆற்றினார். (ச -25,66)



## திட்டமிடல் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25

கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் கோப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் அரச காணிகளை அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்துதல் மற்றும் பொதுத் தேவைகளுக்குரிய அரச காணிகளைப் பிரதேசசபைக்குப் பாரப்படுத்துதல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

நிகழ்வில் கோப்பாய் உதவிப் பிரதேச செயலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், நிர்வாகக் கிராம அலுவலர், மாவட்டக் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், நில அளவைத் திணைக்கள சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர், நீர்ப்பாசனப் பொறியியலாளர், சுற்றாடல் அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உரும்பிராய், புத்தூர் கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், கோப்பாய்ப் பிரதேச செயலக காணி வெளிக்களப் போதனாசிரியர், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், காணிக் கிளை உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-45-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனை மரணங்கள் நீதியை உறுதிப்படுத்துங்கள்


மஸ்தான் கோரிக்கை

மன்னார், நவ.25

மன்னார் மருத்துவமனையில் பிரசவத்தின்போது உயிரிழந்த தாய் மற்றும் சிசு தொடர்பில் உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதுடன் மருத்துவமனை குறித்த மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறான அசாதாரண சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெறாமல் உரியவர்கள் நடவடிக்கைகளை எடுத்து மக்களுக்கு உயரியதும் பாதுகாப்பானதுமான சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும். மன்னார் மருத்துவமனையில் அண்மைக்காலமாக பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட தாய்மார் இறந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. நடந்த சம்பவங்கள் தொடர்பாகக் குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டும் - என்றார்.

(ச-60-110)

## மரண அறிவித்தல்



தோற்றம் 06.11.1943 — மறைவு 24.11.2024

### சந்திரசேகரம்பிள்ளை குபேந்திரநாதன்

கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதி, பழைய காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை குபேந்திரநாதன் நேற்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற புஸ்பநாதன் மற்றும் சத்தியநாதன், கமலநாயகி (இந்தியா), கெங்கேஸ்வரி (UK) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் வைத்தியர் குருநாதன், பூமகள், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனரும், நிரஞ்சனா, ஹேமமாலினி, பிறேமலதா ஆகியோரின் சிறிய தந்தையும், சுமுகன், பாலகுமார், குகதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியன், பிரணித்தா, சந்தியா, மிஷான்யா, சாகீதன், நீரஜா, நிதர்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2024) திங்கட்கிழமை முற்பல் 10.00 மணியளவில் இல.72, பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு, இருபாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.72, பருத்தித்துறை வீதி,**
**இருபாலை,**
**கோப்பாய் தெற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS/56758) N-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.09.1939 — மறைவு 18.11.2022

### திலகமணி தவமணிநாயகம்

திதி: கார்த்திகை மாத நசமி

அம்மா ஆண்டுகள் இரண்டு ஆனதோ
ஆறவில்லை எங்கள் துயரம்
அன்பு நிறைந்த பேரொளியாய்
இன்சொற்பேசி அறிவுரைகள் கூறி
எங்களுடன் வாழ்ந்த உம்மை
நாம் என்றும் நினைத்திருப்போம்.

**கோணப்புலம் ஒழுங்கை,**
**மல்லாகம்.**

**பிரிவால் துயருறும் குடும்பத்தினர்**

(cs 1920) (N-1)

## நினைவலைகள்

இருபத்தேழாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னத்தம்பி சின்னையா**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்
(Radio Officer - Foreign Ship)
**திதி: துதியை**

எட்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் திருமதி சின்னையா சரோஜினி**
**திதி: தசமி**

நாளெல்லாம் நலமாய் வாழ காலமெல்லாம்
கரம் தந்த வாழ்வின் இருதீபங்களே!
நித்தம் உங்களைத் தேடித் தேடி அழுகின்றது மனசு
சித்தம் இரங்கும் இறைவன் ஏன் அழைத்தான் உங்களை
ஆண்டுகள் பல சென்றும் ஆறவில்லை நினைவுகள்

**மீசாலை வடக்கு,**
**வேம்பிராய்,**
**கொடிகாமம்**

**நினைவுகளுடன்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

(cr.43714) (N -1)

## 1ஆம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த ஆண்டு 07.12.2023 வியாழக்கிழமை இறைபதமடைந்த
எமது குலவிளக்கு

### அமரர் முருகேசு புஸ்பவதி

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திக்கிரியைகள் இன்று (25.11.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அயித்தாம்புலம்,**
**கரம்பன் மேற்கு, ஊர்காவற்றுறை,**

**குடும்பத்தினர்**

(cs 56697) (N -1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில்

# பிந்திய மழைவீழ்ச்சியால் பெரும்போகத்தில் வீழ்ச்சி

வவுனியா, நவ.25

**வவுனியா மாவட்டத்தில் இம்முறை பிந்தியமழைவீழ்ச்சி காரணமாக பெரும்போக நெற்செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இதுவரையான காலப்பகுதியில் வவுனியா மாவட்டத்திலுள்ள 9 கம நல அபிவிருத்திப் பிரிவுகளினூடாக 10ஆயிரத்து 51 ஏக்கர் காணியில் மாத்திரம் நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றில் மிகக் குறைவாக உலுக் குளம் பிரிவில் 30 ஏக்கர் மாத்திரம் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் அதிகபட்சமாக ஓமந்தைப் பிரிவில் 2 ஆயிரத்து 489ஏக்கர் அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்துக்கான மழைவீழ்ச்சி பிந்தியமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இனிவரும் நாள்களில் மழைவீழ்ச் சிக்கு ஏற்ப 25ஆயிரத்து 216 ஏக் கர் அளவில் நெற்செய்கை மேற் கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு களே இருப்பதாகவும் மாவட்ட கம நல அபிவிருத்தித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-110)

## மாவீரர் பெற்றோரை மதிப்பளிக்கும் நிகழ்வு

கிளிநொச்சி, நவ.25

மண்ணுக்காக மரணித்த மாவீரரின் பெற்றோரை மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி முரசுமோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஆத்ம சாந்திப் பூசை வழிபாடுகள் நடைபெற்றதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கலந்து கொண்டார்.(ச-45-25-113)

## வீதிகள் சேதம்; மக்கள் சிரமத்தில்

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். நகரில் பிரதம தபாலக சுற்றுவட்ட வீதிச் சந்திக்கு அருகில் திரும்பும் பக்கமாகச் செல்லும் வீதி பெருமளவு சேதமடைந்துள்ளதால் மக்கள் மழை காலங்களில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே குறித்த வீதியைப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-33-17)

## எம்.பி.க்களுக்கு இன்றுமுதல் விசேட செயலமர்வு

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு இன்று திங்கட்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ளது என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், நாடாளுமன்றச் சிறப்புரிமைகள், நாடாளுமன்றத்தின் சட்டவாக்கச் செயற்பாடுகள், நாடாளுமன்றக் குழு முறைமை, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள், அரசியலமைப்பின் ஏற்பாடுகள் என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

## மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திக் கண்காட்சி

மன்னார், நவ.25

மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில். 'நாமும் சாதனையாளர்களே' எனும் கருப்பொருளில் அமைந்த, மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திக் கண் காட்சி மற்றும் நிகழ்வுகள் மன்னார் நகரமண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வாழ்வுதய இயக்குநர் அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளின் நிகழ்வுகள் மற்றும்பொருட்களின் கண்காட்சியும் இடம்பெற்றது. நிகழ்வில்,மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறை மாவட்டக் குருமுதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், மன்னார் கரித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் மற்றும் பணியாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-45-56,60)



09ஆம் ஆண்டு நினைவுச்சுடர்



தோற்றம் 09 . 11 . 1956
மறைவு 05 . 12 . 2015

அமரர் கிட்டினர் நாகராசா

திதி: அபரபக்க தசமி

எங்கள் அன்புத் தெய்வம் அப்பாவே!
நொடிப்பொழுதில் எமை
நோகவிட்டு சென்றுவிட்டீர்கள்
சுவாசிக்க சுவாசம் இல்லை நேசிக்க யாரும் இல்லை
நெஞ்சம் எல்லாம் வலிகளுடன் நிஜங்களைத் தேடுகின்றோம்
நிஜம்தானா என்று எண்ணி நித்தமும் தவிக்கிறோம் அப்பா!
வானில் சிந்திடும் துளியில் மண்ணில் பயிர்கள் துளிர்விடும்
எங்கள் விழிகள் சிந்திடும் துளியின் வழியில்
உங்களை கண்டிட முடியாதோ
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில் என்றென்றும் நிறைந்திருக்கும்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கைதடி நாவற்குழி
கைதடி.

குடும்பத்தினர்
077 720 1615

(CS 29292) Y-1





## ஒளி விழா

யாழ்ப்பாணம், நவ.25

புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் அதிபர் சி.சிவகுமார் தலைமையில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துயரங்களுக்கு வன்முறை ஒருபோதும் தீர்வாகாது!

## மன்னார் மருத்துவமனை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

**ஓர் இழப்பென்பது எந்தவிதத்திலும் தாங்க முடியாதது. காரண காரியங்கள் இருந்தாலும் அந்த இழப்பு எல்லோர் மனதையும் புண்படுத்தக்கூடியது. ஆயினும் எந்தப் போராட்டமும் அமைதியானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் ஏனையவர்களை துன்புறுத்தாத வகையில் இருக்கவேண்டும் - இவ்வாறு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் திட்டமிட்டு தோற்றுவிக்கப்பட்ட அவசர நிலை குறித்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை நிர்வாகம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் போராடும் உரிமை உண்டு. ஆனால் எந்தப் போராட்டமும் அமைதியானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் ஏனையவர்களைத் துன்புறுத்தாத வகையிலும் இருக்க வேண்டும். மன்னார் மருத்துவமனையில் போராட்டம் இடம்பெற்ற அன்றைய தினம் 50 க்கும் மேற்பட்டவர்கள் பிரசவ அறைக்குள் நுழைந்ததையடுத்து பிரசவித்துக் கொண்டிருந்த இன்னொரு தாய்க்கான சேவையை சீர்குலைத்தது.

மேலும் மருத்துவமனை ஊழியர்களின் பாதுகாப்பு கவலைக்கிடமாகியது. மக்கள் விலை மதிப்பற்ற அரச உடைமைகளை நாசம் செய்ய முற்பட்டனர். பிரசவஅறையின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. இத்தகைய கவலைக்கிடமான சம்பவங்களின் விளைவுகளாக மருத்துவமனையின் ஒட்டுமொத்த ஊழியர்களுமே மன முடைந்து செயலற்றுப்போயுள்ளோம்.

தாய்-சேய் இறப்புக்கான காரணங்கள் நடுநிலையாக ஆராயப்பட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

அதற்குரிய முழு ஒத்துழைப்பையும் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

எனவே துயரங்களுக்கு வன்முறை ஒரு போதும் தீர்வளிக்காது- என்றுள்ளது. (ச-56-60)



# ஒளி விழா

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்.மேரிஸ் முன்பள்ளியின் ஒளி விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது முன்பள்ளிச் சிறார்களின் நடனம், பேச்சு, பாடல், போன்ற கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் சிறார்களுக்குப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. நிகழ்வில் கட்டைக்காடு பங்குத்தந்தை, கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை உப அதிபர், கடற்றொழிலாளர் சங்க தலைவர், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், மாணவர்களின் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)

# 'லாப்ஸ்' எரிவாயுவுக்கு வடமராட்சியில் தட்டுப்பாடு

கொழும்பு,நவ.25

வடமராட்சியில் 'லாப்ஸ்' சமையல் எரிவாயுவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலை தொடர்ந்துவரும் நிலையில் அதனைப் பயன்படுத்தும் பொது மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். தினமும் எரிவாயு விற்பனை நிலையங்களை நோக்கிச் செல்லும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்வதை அவதானிக்க முடிகிறது. (ச-100)

# உயிர்ப் பாதுகாப்புக்காக இடமாற்றம் செய்யுங்கள்

## மன்னார் மருத்துவமனை அத்தியட்சகர் கோரிக்கை

மன்னார்,நவ.25

எனது உயிரைப் பாதுகாக்க வடக்கிலிருந்து உடனடியாக என்னை இடமாற்றம் செய்யவேண்டும் எனக் கோரி மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஆசாத் எம். ஹனிபா மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டதிலிருந்து பல சுகாதார தர மேம்பாடுகள் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் என்னை அர்ப்பணித்து வந்துள்ளேன். எனினும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த 19ஆம் திகதி துரதிர்ஷ்டவசமான மகப்பேறு மரணம் நிகழ்ந்துள்ளது. குறித்த தாய் மற்றும் சிசுவின் மரணம் தொடர்பாக உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும் மகப்பேற்று விடுதியில் புகுந்த கும்பல் பிரசவ அறைக்குள் நுழைந்து மருத்துவமனையின் சொத்துகளை சேதப்படுத்தியுள்ளதுடன் என்னைத் தனிப்பட்ட முறையில் குறி வைத்து சரமாரியாக தாக்க முயன்றனர். அவர்கள் என்னைக் கொலையாளி என்று கூறி கூச்சலிட்டனர்.

எனவே எனது பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தயவு செய்து என்னை மிக விரைவில் வடக்கு மாகாணத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யுங்கள் - என்றுள்ளது. (ச-56)



கிளிநொச்சியில்

# கேரளக்கஞ்சாவுடன் முதியவர் கைது

கிளிநொச்சி,நவ.25

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் கேரளக்கஞ்சாவுடன் பேருந்தில் பயணித்த முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் முதியவரின் பயணப் பொதியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கிலோ 750 கிராம் நிறையுடைய கேரளக்கஞ்சா மீட்கப்பட்டது.

64 வயதுடைய முதியவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை சான்றுப்பொருளுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார். (ச-113)

# ஜீப் விபத்து இருவர் பலி

கொழும்பு, நவ. 25

குளியாப்பிட்டி கம்புராப்பொல ஓயா கங்கையில் ஜீப் வண்டியொன்று பாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அதிக வேகம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)



# கிளிநொச்சி மருத்துவமனைக்கு நோயாளர் நலன்புரிச் சங்கம்

கிளிநொச்சி, நவ.25

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு நீண்ட காலத்துக்குப் பின்னர் நோயாளர் நலன்புரிச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிர்வாகத்தெரிவு தனியார் விருந்தகம் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. புதிய நிர்வாகத்தில் தலைவராக ஓய்வு பெற்ற பிரதி அதிபர் க. விஜயசேகரன், செயலாளராக அரசியல் துறை முன்னாள் போராளி வேங்கை, பொருளாளராக செல்வராணி, உப தலைவராக இராசதுரை, உப செயலாளராக கபிரியல் லோறன்ஸ், நிர்வாக உறுப்பினர்களாக துசிகரன், அதிபர் றொபேட் கெனடி, சிறிரங்கநாதன், மயில்வாகனம், திலகராஜ், ஆனந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைத்...

என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள புதிய ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது கொள்கை விளக்க உரையில், இனவாதத்தால் இரத்த ஆறு ஓடிய வரலாறுகொண்ட இந்த நாட்டில், மீண்டும் அந்த நிலைக்கு இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றை வரவேற்கிறேன். நாட்டின் அபிவிருத்திக்கு, தேசியப்பிரச்சினைக்குத்தீர்வு முக்கியமாகும். மக்கள் விடுதலை முன்னணி 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுத்து வந்த புரட்சியால் நாட்டில் இரத்த ஆறு ஓடியது. இனவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டை அவர்கள் அன்று கடைப்பிடித்திருந்தால், நாட்டில் இரத்த ஆறு ஓடி இருக்காது. வடக்கில் பிரிவினைவாதப் போர் ஏற்பட்டிருக்காது.

அவர்களுக்கு அதிகாரம் கிடைத்துள்ள நிலையில் 35 வருடங்களுக்கு பின்னராவது இந்த உண்மை அவர்களுக்குப் புரிந்திருக்கிறது. அதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். தமிழ் மக்களின் உரிமைக்காக நாங்கள் வடக்குக்கு சென்று போராடி இருக்கிறோம். அதேபோன்று முஸ்லிம் மக்களின் நியாயமான உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தோம். தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையிலே நாங்கள் இருந்து இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.

அதனால் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கி, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் முன்னெடுக்கும் பயணத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே எமது நோக்கமாகும். நாங்கள் ஒருபோதும் அதிகாரத்துக்காக இனவாதத்தைகையில் எடுத்ததில்லை. நான் மாத்திரமல்ல, எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் அரசியல் அதிகாரத்துக்காக இனவாதத்தை கையில் எடுத்ததில்லை. ரணில் விக்கிரமசிங்க பிரபல்ய அரசியல் செய்யவில்லை. அவர் எப்போதும் அறிவுப்பூர்வமான தீர்மானங்களையே எடுத்தார். அதனால் அநுரகுமார திஸாநாயக்கவும் பிரபல்ய அரசியல் செய்வதைவிடுத்து, அறிவுப்பூர்வமான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலில் வடக்கு மக்களின் மனதை வெற்றிகொள்ள தேசிய மக்கள் சக்திக்கு முடியுமாகி இருக்கிறது. இது வரலாற்று வெற்றியாகும். மக்கள் விடுதலை முன்னணி தனது இனவாத, மதவாதத்தை நிராகரிப்பதற்கு வடக்கு மக்களின் ஆதரவும் காரணமாக இருக்கலாம். அதனால் தமிழ் மக்களின் தேவைகளை உணர்ந்து, அதனை நிறைவேற்றும் வகையில் அரசாங்கத்தின் பயணம் இருக்க வேண்டும்-என்றார். (அ-எ-இ)

## மறியல்...

நீதிமன்றத் தின் உத்தரவுக்கமைய வவுனியா விளக்கமறியல் சிறைச் சாலையில் கடந்த 19ஆம் திகதி முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவர் தொடர்புடைய வழக்கு எதிர்வரும் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவிருந்தநிலையில், சந்தேகநபர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சிறைக்காவலர்களால் வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதில் நீதிவான் த.திருஅருள் சிறைச்சாலைக்குச் சென்று சம்பவம் இடம்பெற்ற இடத்தையும், வவுனியா மருத்துவமனைக்குச் சென்று சடலத்தையும் பார்வையிட்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் கொல்லப்பட்டாரா அல்லது தவறான முடிவெடுத்து உயிரிழந்தாரா என்பது தொடர்பான விசாரணை வவுனியா பொலிஸாரால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. (அ-எ-110)

## உயர்தரப்...

உயர்தரப் பரீட்சையின்போது, பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகள் மட்டுமே பரீட்சை நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலதிக பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தமுடியும் எனவும் பரீட்சை மண்டப உதவி பொறுப்பதிகாரிகள் அல்லது கண்காணிப்பாளர்கள் கையடக்கத்தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதியில்லை எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## உயிரிழந்தோரை...

நேற்று ஊடகம் ஒன்று மாவீரர் தினம் தொடர்பாகக் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. பாதுகாப்பு தரப்பினர் இதற்கு இடையூறு எதையும் ஏற்படுத்தவில்லை. இது தெரியுமா? அல்லது நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?" என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியிருந்தது.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஆனந்த விஜேபால,

வடக்காக இருந்தாலும், கிழக்காக இருந்தாலும், தெற்காக இருந்தாலும், மலையகமாக இருந்தாலும் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூருவதற்குரிய உரிமை உள்ளது. இதற்கு நாம் எந்த விதத்திலும் இடையூறு ஏற்படுத்தவில்லை. தடை செய்யப்பட்ட தமது பிள்ளைகளை நினைவுகூரும்போது அவர்கள் பயங்கரவாதிகளை நினைவு கூருகின்றனர் எனக் காட்ட முற்படவும்கூடாது. ஆனால் புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அவ்வமைப்பின் இலச்சினை, படங்களைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வை நடத்த இடமளிக்க முடியாது - என்றார். (அ-எ-44)

## வெள்ள...

நேற்று பிரதேச செயலர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வெள்ள இடரால் பாதிக்கப்படக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்தல், தற்காலிக தங்குவதற்கான தங்குமிடங்களை தயார்படுத்தல், சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுத்தல், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல், ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகள் ஏற்கனவே அகற்றப்பட்டதற்கு மேலதிகமாக, மேலும் இனங்காணப்பட்ட ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகளை அகற்ற நடவடிக்கை எடுத்தல், ஆபத்தான பனை மரங்களை அகற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுக்குரிய பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு எழுத்து மூலம் அறிவித்து அகற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இடர்கள் தொடர்பாக 24 மணி நேரம் இயங்கும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கங்களுக்கு (077 395 7894 /021 222 1676 /021 211 7117 மற்றும் Hot line 117) பொது மக்கள் தகவல்களை வழங்க முடியும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். (அ-எ-26)

## புயலாக...

இந்த ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம் இன்று இரவு அல்லது நாளை அம்பாறைக்கு அருகாக வந்து பின்னர் நாளை இரவு அல்லது நாளைமறுதினம் காலை வடக்கு நோக்கி நகர்ந்து 28ஆம் திகதி வடக்கு மாகாணத்திற்கு அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த புயல் எப்பகுதியில் கரையைக் கடக்கும் என தற்போது வரை கணிக்க முடியவில்லையாயினும் தற்போதைய நிலையில் இது சென்னைக்கும் நெல்லூருக்குமிடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்துக்கு தற்போது கிடைக்கும் கன மழை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை தொடரும் வாய்ப்புள்ளது. இன்றுமுதல் கிழக்கு மாகாணத்துக்கு மிகக் கன மழை கிடைக்க தொடங்கும். இன்று காலை முதல் படிப்படியாக காற்றின் வேகம் கரையோரப் பகுதிகளில் அதிகரிக்கத் தொடங்கும்.

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மிதமான மழை இன்று முதல் தீவிரமடையும். நாளை முதல் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கத் தொடங்கும். இந்த மழை 30ஆம் திகதிவரை நீடிக்கும். வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் இன்று பிற்பகல் முதல் படிப்படியாக காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புண்டு என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (அ-எ-26-66)

## விபத்தில்...

இருந்து மாங்குளம் நோக்கி வந்தபோது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்திருந்தது. இந்த விபத்தில் இருவர் உயிரிழந்திருந்தநிலையில், இவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

மாங்குளம் மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையில், இவர் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## தவறான...

28 வயதான இவர் தவறான முடிவெடுத்து கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## நாட்டின்...

ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கில் ஆனையிறவு பாதுகாப்பு அரண் நீக்கப்பட்டுள்ளது. சுதந்திரமாக செல்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு நிலைவரத்தைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கலாம் என நம்புகின்றோம். பொதுத்தேர்தலுக்கு முன்னரே இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உலகில் 32 நாடுகளில் புலிகள் அமைப்புக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழர்கள் இருப்பதுபோலவே புலம்பெயர் புலிகளும் உள்ளனர். புலம்பெயர் தமிழர்களில் சாதாரண மக்கள் உள்ளனர். புலம்பெயர் புலிகளில் இனவாதிகளும், அடிப்படைவாதிகளும் உள்ளனர். தமிழீழப் படத்துடன் வெளிநாடுகளில் திரியும் குழுவும் உள்ளது.

அதனால் எமது நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் ஜனாதிபதி விழிப்பாக இருக்கவேண்டும். அவர் அவ்வாறு இருப்பார் என நம்புகின்றோம். அதேபோல சாதாரண தமிழ் மக்கள் ஒற்றையாட்சிக்குள் அமைதியாக வாழவே விரும்புகின்றனர். எனினும், அடிப்படைவாத, பிரிவினைவாத சிந்தனைகொண்ட தரப்புகளும் இருக்கவே செய்கின்றன.

இந்த நாட்டு மக்களைக் கொலை செய்த பயங்கரவாத அமைப்பின் தலைவரை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் போற்றுகின்றார். சர்ச்சைக்குரிய அறிவிப்புகளையும் விடுத்துள்ளார். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் - என்றார். (அ-எ-44)

## பணம்...

அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், நல்லூர், அரசடிப் பகுதியில் வைத்து சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் இருந்து 10 போதை மாத்திரைகளும், 240 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது. திருடிய பணத்திலேயே அவற்றை அவர்கள் கொள்வனவு செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்பதும், போதைப்பொருள்கள் வாங்குவதற்காகத் திருட்டுகளில் ஈடுபடுபவர்கள் என்பதும் முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. (அ-எ-26-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றூர்தி சாரதி ஒருவர் மீது சாரதி, நடத்துநர் தாக்குதல்!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.25


தனியார் சிற்றூர்தி சாரதி ஒருவர் மீது மற்றொரு சிற்றூர்தி சாரதியும், நடத்துநரும் தாக்குதல் நடத்தினர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று பருத்தித்துறையில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிற்றூர்தியை, ஆனைப்பந்திப் பகுதியில் வைத்து மறித்த அச்சுவேலி சிற்றூர்தி ஒன்றின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் தாக்குதல் நடத்தினர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான சாரதி, சிற்றூர்தியில் பயணித்த பயணிகளுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)



# உடுவில் மகளிர் கல்லூரி 200 ஆவது ஆண்டு நிறைவு விழா



உடுவில் மகளிர் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அண்மை யில் யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து துவிச்சக்கர வண்டிப் பவனியும், நடைபவனியும் வாகன பவனியும் காங்கேசந்துறை - யாழ்ப்பாணம் வீதி ஊடாக மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம் சந்தியை வந்தடைந்து உடுவில் வீதியூடாக பாடசாலை சென்றடைந்தது.

நிகழ்வில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி வே.பத்மதயாளன், அதிபர் றொசானா மதுரமதி குலேந்திரன், முன்னாள் அதிபர்களான சி.வி.செல்லையா, திருமதி சிராணிமில்ஸ், திருமதி பற்றிசியா, சுனித்தா ஜெபரட்ணம்,மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-45-125-27)


## காணிகள் தேவை
## Pk Real Estates

வடமாகாணத்தில் காணிகள் உடனடியாக வாங்கப்படும் PK நிறுவனத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தில் காணிகள் அல்லது வீடுகள் விற்பதற்கோ அல்லது வாங்குவதற்கோ இருந்தால் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

021 222 1813, 071 010 0002, + 4474 8130 4127

4 / 1 Senguntha Market Kalviyankaadu, Jaffna.


## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,நவ.25


கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலயத்தின் ஒளிவிழா அதிபர் கே. தவகீஸ்வரன் தலைமையில் கடந்த புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் பல இடம்பெற்றன. (ச-33-17)



# மரண அறிவித்தல்

## திரு சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்)



பிறப்பு 31.07.1950

இறப்பு 24.11.2024

சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை உரிமையாளர் (நியூ கமல் செரமிக்ஸ் யாழ்ப்பாணம், ஸ்ரான்லிறோட் மற்றும் ஞானம்ஸ் கோட்டல்-மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) .

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் 372, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்) அவர்கள் நேற்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை பாக்கியம் தம்பதியினரின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற இராசரத்தினம்-கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரி, கயேந்திரநாதன் (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, குமாரசாமி, கதர்காமநாதன் அவர்களின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் தவமணிதேவி, காந்தமலர், கமலாதேவி, யோகேஸ்வரி அவர்களின் அன்பு மைத்துனரும் தயாழினி ,Dr.கார்த்திகா, காலஞ்சென்ற கார்த்தீபன் அவர்களின் பாசமிகு தந்தையும் அச்சுதன் (மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்,தேர்தல் ஆணைக்குழு), Dr.மயூரன் (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவீஷன், ஷாகீசன், அதீதிஸ்ரீ, ஆதித்ரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2024) திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
071 815 7001, 077 404 8684

(CR 43059) V-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.